# சங்கம் இந்தியா

## இராமாவரம்

இராமாவரம் பகுதி சென்னையின் பூந்தமல்லி நெடுஞ்சாலையை ஒட்டி உள்ளது. இப்பகுதியில் MIOT மருத்துவமனைக்கு அருகே வசிக்கும் 400 வசதியற்ற மக்களின் முன்னேற்றத்திற்காக இவ்வமைப்பு பணி செய்கிறது.

<u>கல்வி</u>:
சங்கம் இந்தியா அமைப்பு இப்பகுதியில் முதல் தடவையாக இரு மாணவிகளுக்கு உயர் கல்விக்காக நிதி உதவித்தொகை வழங்கியுள்ளது.

<u>சுகாதாரம்</u>:
இங்கு வசிப்போரின் உடல் நலனை பேணும் பொருட்டு பற்கள், கண், காது, மூக்கு தொண்டை பொது நலம் மற்றும் பெண்கள் நலம் சம்பந்தமான மருத்துவ முகாம்களை நடத்தி வருகிறது. இவற்றின் மூலமாக விட்டமின் குறைபாடுகள் முதல் கட்டி வரையான பல வித நோய்களை கண்டறிந்து அவைகளுக்கு சங்கம் இந்தியா உறுப்பினர் இலவசமாக சிகிச்சை அளித்து நலம்செய்கிறார்கள்.

<u>உணவுதவி மற்றும் பிற உதவிகள்</u>:
சங்கம் இந்தியா குழந்தைகளுக்காக ஆக்கப்பூர்வமான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நடத்தியும் சத்தான உணவு தந்தும் மகிழ்விக்கிறது.

<u>ஆய்வு</u>:
இங்கு வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பற்றி அறிய வீட்டுக்கு வீடு சென்று புள்ளி விவரக் கணக்கெடுப்பை சங்கம் இந்தியா சேகரித்துள்ளது.

இது சென்னையில் சமூகத்தின் அடிமட்டத்தளத்தில் வசிக்கும் வசதி, வாய்ப்பற்றோரின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த தங்களை அர்ப்பணித்துக்கொண்ட மருத்துவ மாணவர்களால் நடத்தப்படும் தொண்டமைப்பு






## குறிக்கோள்:

இங்கு வசிக்கும் குழந்தைகளிடம் தனிப்பட்ட "தோழமை" முறையில் பிணைப்பை ஏற்படுத்தி, அவர்களை ஊக்குவித்து முறையான கல்வித்திட்டத்தில் சேர உதவுவது. சுத்தம், சுகாதாரம் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல், சிறந்த எடுத்துக்காட்டுக்களை முன்னிறுத்தி நல் வழிகாட்டுதல், ஆக்கப்பூர்வமான பொழுதுபோக்குகளை கற்றுத் தருதல் மற்றும் தொழிற்கல்வியை அளித்தல் போன்ற பணிகளை செய்கிறது.

## நீங்களும் சங்கம் இந்தியாவுக்கு உதவலாம்:

- இராமாவரம் போன்ற பகுதிகளில் உள்ள வசதியற்ற மக்களின் பிரச்சினைகளைப் பற்றி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தலாம்.
- நிதி உதவி கொடுக்கலாம். ஆண், பெண், குழந்தைகளுக்கான புது, நல்ல நிலையில் உள்ள பழைய துணிமணிகள் தரலாம். விளையாட்டு பொருள்கள், எழுத்து உபகரணங்கள் போன்றவையும் கொடுக்கலாம்.
- சங்கம் இந்தியா மேற்கொள்ளும் பணிகளுக்கு சட்ட, மருத்துவ உதவி போன்ற பல துறை சம்பந்தமான வழிகளிலும் உதவ முன் வரலாம்.

<u>இமெயில்</u>: info@sangamindia.org    <u>வலைப்பதிவு</u>: www.sangamindia.org    <u>கைப்பேசி</u>: +91 9789901650

சங்கம் இந்தியா லாபம் எதுவும் எதிர்பார்க்காத ஒரு சங்கம்.